(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 1(11).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 ஏப்ரல் 22 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2022 மே 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1472/2022

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டின் சிறுபோகத்தின்போது நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றுள் சேதனப் பசளை பயன்படுத்தப்பட்டு நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற் காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iii) சேதனப் பசளையைப் பயன்படுத்தி நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவையென்பதையும்;

(iv) அநுராதபுரம் மாவட்டத்தில் சேதனப் பசளை மூலம் மேற்கொள்ளப்படும் நெற் செய்கையை பிரபல்யப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2022 மே 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1731/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தனியார் துறையில் சேவையாற்றும் ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்த தீர்மானிப்பதற்கு ஏதுவான காரணிகள் யாவையென்பதையும்;

(ii) ஓய்வு பெறும் வயது 60 ஆக உயர்த்தப்படுவதன் காரணமாக 55 வயது பூர்த்தியடையும்போது, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரித்து இழக்கப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பில் அமைச்சினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1946/2022

கௌரவ லலித் எல்லாவல,— பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் திரு. ரோஹண விஜேவீர அவர்களை 1989.11.12 ஆம் திகதி அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் கைது செய்து அது தொடர்பாக ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தியது என்பதையும்;

(ii) 1989.11.13 ஆம் திகதி அவர் உயிரிழந்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. ரோஹண விஜேவீர அவர்களின் மரணம் இயற்கை மரணமா என்பதையும்;

(ii) இன்றேல், அது ஒரு படுகொலையா என்பதையும்;

(iii) படுகொலை எனின், அது தொடர்பில் இலங்கையின் நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்பொன்று உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி மரணம் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவர் அல்லது தலைவர் ஒருவர் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1947/2022

கௌரவ வசந்த யாப்பாபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் கல் உடைத்தல், பாரிய கைத்தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும்;

(ii) குண்டசாலை பிரதேசத்தில் திகன, ஹீப்பிட்டிய, அஹஸ்பொக்குண மற்றும் மல்பான பகுதிகளிலும், யட்டிநுவர பிரதேசத்தில் அலகல்லே, உடுநுவர பிரதேசத்தில் எழுகொட மற்றும் ஹந்தபான பகுதிகளிலும் மேற்படி கல் உடைத்தல் காரணமாக பாரியளவில் சூழல் பாதிக்கப்படுவதாக, சூழலுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இன்றளவில், கண்டி மாவட்டத்தில் கல் உடைத்தலுக்கென வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் கல் உடைத்தல் நடைபெறுகிறதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அக்காணிகளில் கல் உடைப்பதற்காக வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) (i) கல் உடைப்பதன் காரணமாக புழுதி, கற்சிதறல் மற்றும் பாதைகள் அழிவடைதல் போன்ற பொதுத் தொல்லைகள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை;

(ii) கல் உடைப்பதன் காரணமாக யட்டிநுவர, நாவலப்பிட்டி, உடுநுவர, குண்டசாலை போன்ற பிரதேசங்களில் நீர் ஆதாரங்கள் அழிந்துபோதல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1959/2022

கௌரவ காமினி வலேபொட,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் பெருந்தோட்டக் கைத்தொழில் விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1993/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆண்டு தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் இலங்கையின் தேசிய பாடசாலைகளுக்கான கல்விசாரா பதவியணிகளுக்கு ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பதவிப் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2002/2022

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்வர்ண பூமி, ஜய பூமி, இசுரு பூமி மற்றும் ரன் பூமி காணி உறுதியுடைய உரிமையாளர்கள் இறந்ததன் பின்னர் அக்காணிகளின் உரிமைத்துவம் தொடர்பாக நிலவும் சட்ட ரீதியான நிலைப்பாடு யாதென்பதையும் ;

(ii) மேற்குறிப்பிட்ட காணிகளின் பின்னுரிமை குடும்பத்தின் மூத்த பிள்ளைக்கு மாத்திரம் கிடைக்கப்பெறுவதன் காரணமாக பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

(iii) காணியின் உரிமைத்துவம் தனது ஏனைய சகோதர/சகோதரிகளுக்கு வழங்கப்படுவதை அவர் மறுக்கும் பட்சத்தில் அச் சகோதர/சகோதரிகளுக்கு கிடைக்கும் சட்டரீதியான பாதுகாப்பு யாதென்பதையும்;

(iv) இதனுடன் தொடர்புடைய சட்டங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில் அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(vi) மேற்குறிப்பிட்ட காணிகளின் மரபுரிமையானது குடும்பத்தின் பிள்ளைகளுக்கிடையில் சமமாகப் பிரிந்து செல்லும் வகையில் உரிய உறுதிகளை தயாரிப்பதில் நிலவும் தடைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளை துண்டுகளாக்கும் போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய பிரிவிடல் மட்டுப்பாடுகளானவை மேட்டு நிலம் மற்றும் சேற்று நிலம் என்ற அடிப்படையில் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) அப்பிரிவிடல் மட்டுப்பாடுகள் காரணமாக பல சிக்கல்கள் எழுந்துள்ளன என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்குரிய தீர்வுகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2004/2022

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் மூலதனக் கம்பனியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி புலனாய்வுகளின் மூலம் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய முறைகேடுகள், முறையற்ற நியமனங்கள், ஊழல் செயற்பாடுகள் அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2012/2022

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் மற்றும் கமநல அபிவிருத்தி பகுதி அலுவலர் பதவிகளின் எண்ணிக்கை;

(ii) இன்றளவில் மேற்படி பதவிகளில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை;

(iii) மேற்படி பதவிகளில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை,

வெவ்வேறாக எத்தனை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கமநல சேவை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றினூடாக விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்காக ஏதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா;

(iii) மேற்படி நிலையங்களூடாக விவசாயிகளுக்கு விதைகளை பெற்றுக்கொடுப்பதற்கு ஏதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், பெற்றுக்கொள்ளக் கூடிய விதைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) விதை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் உறப்படும் செலவினம் எவ்வளவு;

(ii) உள்ளூர் விதைகளை மேம்படுத்துவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2023/2022

கௌரவ மதுர விதானகே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2040/2022

கௌரவ மர்ஜான் பளீல்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் போக்குவரத்து பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2022 மே 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2043/2022

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— பிரதம அமைச்சரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை இந்திய உதவித் திட்டத்தின் கீழ் மொணராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வீடுகள் எப்பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) குடியிருப்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் அவ்வீடுகளில் உள்ளனவா என்பதையும்;

(iv) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் பணி புரியும் ஊழியர்களுக்கு மாத்திரம் மேற்குறிப்பிட்ட வீடுகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(v) ஆமெனில், அத்தீர்மானத்தை மேற்கொண்ட தரப்பினர் யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்திய உதவித் திட்டத்தின் கீழ் அல்லது வேறொரு திட்டத்தின் கீழ் மொணராகலை மாவட்டத்தில் உள்ள தோட்டங்களில் மற்றும் தோட்டங்களை அண்டியதாக வாழும் மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்து வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) எக்காலப்பகுதியில் அவ்வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்பதையும்;

(iv) அவ்வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படும் அடிப்படை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2059/2022

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2071/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுயாதீன தொலைக்காட்சிச் சேவையினதும் லக்ஹண்ட வானொலி சேவையினதும் புதிய சின்னங்களை ஊக்குவிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுயாதீன தொலைக்காட்சிச் சேவை மற்றும் லக்ஹண்ட வானொலி சேவைக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆலோசகர்களின் எண்ணிக்கை;

(ii) அந்த ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், கல்வி மற்றும் ஏனைய தகைமைகள், செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், வழங்கப்பட்ட ஏனைய வசதிகள் மற்றும் அவ்வொவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை;

யாதென்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட ஆலோசகர்கள் சுயாதீன தொலைக்காட்சிச் சேவைக்கும், லக்ஹண்ட வானொலி சேவைக்கும் வழங்கிய சேவை யாதென்பதை அவர் மேலும் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2084/2022

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2022 ஆம் ஆண்டு பெரும்போகத்தின்போது நெல் சந்தைப்படுத்தல் சபை நெல் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2022 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற நெல் அறுவடை யாதென்பதையும்;

(ii) மேற்படி நெல் அறுவடையில் நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் நெல்லின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி நெல்லின் அளவு ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(iv) 2022 பெரும்போகத்தின்போது நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் நெல்லின் அளவு, அப்போகத்தின் மொத்த நெல் அறுவடையின் சதவீதமாக யாதென்பதையும்;

(v) 2022 ஆம் ஆண்டு பெரும்போகத்தின்போது நெல் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நெல் சந்தைப்படுத்தல் சபை வசமுள்ள களஞ்சியங்களின் கொள்ளளவு அவை அமைந்துள்ள மாவட்டங்களின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) சபையினால் முன்னைய போகங்களின் போது கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்புக்கள் தற்போது எஞ்சியுள்ளனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2094/2022

கௌரவ அஜித் ராஜபக்ஷ,— அரச நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திரு.ரஞ்சித் கீர்த்தி தென்னகோன் அவர்கள் தென் மாகாண ஆளுநராக கடமையாற்றிய காலப்பகுதியில் அவருடைய புகைப்படம் தென் மாகாண சபையின் அரச நிறுவனங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது என்பதையும்;

(ii) அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தென் மாகாண சபையினால் ஏற்கப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆளுநருக்கு அல்லது அரச அதிகாரி ஒருவருக்கு மேற்குறிப்பிட்ட புகைப்படத்தை காட்சிப்படுத்துவதற்குரிய யாதேனும் சட்டரீதியான அதிகாரம் நிதிப் பிரமாணங்கள் அல்லது வேறு முறையான தாபனச் சட்டத்திற்கு அமைவாக உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அச்சட்டரீதியான அதிகாரமளிக்கப்பட்டுள்ள எழுத்து மூலமான சட்டத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி ஒன்றினை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2114/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் வசமுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி சபையில் இன்றளவில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் வசமுள்ள பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகளில் தற்போது அதிவேகப் பாதைகளில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அதிவேகப் பாதைகளில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பேருந்துகளின் மூலமாக ஆரம்பத்திலிருந்து இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள வருமானம் மற்றும் மேற்படி பேருந்துகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை இலங்கை போக்குவரத்துச் சபையின் வருமானம் மற்றும் செலவினம் ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2260/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள தேசியப் பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2456/2022

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த காலப்பகுதியில் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்ட புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகளின் கோரிக்கைகள் தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) முன்னறிவித்தலின்றி மேற்கொள்ளப்படும் இத்தகைய தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2564/2022

கௌரவ வடிவேல் சுரேஷ்,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எனது கோரிக்கைக்கு அமைவாக தோட்டப்புறங்களில் வாழும் மக்களின் சமய, கலாசார, நலனோம்புகை மற்றும் பிற செயற்பாடுகளுக்காக பயன்படுத்தக்கூடிய வகையில் அப்போதைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு பதுளை மாவட்டத்தில் தோட்டப்புற பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் 16 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் அங்கீகாரம் வழங்கி இதற்காக 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்ததென்பதையும்;

(ii) இதில் 14 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதென்பதையும்;

(iii) ஆயினும், மேற்படி கலாசார நிலையங்களை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க பணிகளுக்கென 20.5 மில்லியன் ரூபா பதுளை மாவட்ட செயலாளருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி 16 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2568/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விரிவுரையாளரின் பெயர் மற்றும் சேவை நிலையம் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி விரிவுரையாளர்களுக்காக –

(i) அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு;

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள நிதி;

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் பயன்படுத்தப்படாத நிதி;

ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதனை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமை தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?